# திரப்பனே பிரதேச சபை

# அநுராதபுர மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 21 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 19 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 12 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரப்பனே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

(அ) 2011 ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 400,000 தொகையினை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றெென வருமானச் செலவுக் கணக்கில் காட்டப்பட்டிருந்தமையால் அதே தொகையால் ஆண்டிற்கான வருமானம் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தொகை ரூபா 945,330 மீளாய்வாண்டிற்கான நீதி மன்றத் தண்டப் பண வருமானம், வருமானச் செலவுக் கணக்கில் ரூபா 759,570 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 185,760 இனால் ஆண்டிற்கான வருமானம் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) ரூபா 224,719 இற்கான நிலுவை நீதி மன்றத் தண்டப் பணத்தின் பெறுமதி ஐந்தொகையில் வருமானக் கடன்பட்டோர்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

1.3.2 பெறவேண்டிய மற்றம் செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------------------------

03 ஆண்டுகளை மிகைத்த காலம் முதல் காணப்படும் 04 விடயங்கள் தொடர்பாக ரூபா 673,031 இற்கான பெறவேண்டிய கணக்குகளும், 06 விடயங்களைச் சேர்ந்த

கூட்டுத்தொகை ரூபா 846,891 இற்கான செலுத்த வேண்டிய கணக்குகளும் தீர்க்கப்படாமல் முன்கொண்டு வந்து காணப்பட்டது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

கூட்டுத்தொகை ரூபா 32,778,692 இற்கான 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்/ விரிவான பட்டோலைகள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது செயற்பாட்டு மிகை ரூபா 336,098 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் செயற்பாட்டு பற்றாக்குறை ரூபா 2,322,226 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------

2.2.1 வீத வரி

------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1) இன் பிரகாரம் முன்னேற்றப்பட்ட பகுதிகளை இனங்கண்டு வீத வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 நிலுவை கடை வாடகை

-----------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில் அறவிடப்பட வேண்டிய நிலுவை கடை வாடகை மீதி ரூபா 454,764 ஆக காணப்பட்டதுடன், அம் மீதியில் அடங்கியுள்ள ரூபா 254,350 தொகை தொடர்ந்தும் அறவிடப்படாமல் காணப்படும் நிலுவை மீதி ஒன்றாகும்.

2.2.3 நிலுவை கழிவுப் பொருட்கள் வரி

-------------------------------------------------------

தொடர்ந்தும் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளவை அறவிடப்பட வேண்டிய நிலுவை கழிவுப் பொருள் வரி வருமானம் ரூபா 203,260 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை செய்திருக்கவில்லை.

2.2.4 தொலைபேசி டவர் கட்டணம்

-----------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 09 செலுத்துகை டவர்கள் அமைக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனங்களில் இருந்து வருடாந்த வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவீடு

செய்வதற்காக இலங்கை குடியசரின் 2009 ஏப்ரல் 17 திகதிய இலக்கம் 1597/8 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு